**OPEN ACCESS**

Manuscript ID:
TAM-10032026-10038

Volume: 10

Issue: 3

Month: January

Year: 2026

P-ISSN: 2454-3993

E-ISSN: 2582-2810

Received: 27.11.2025

Accepted: 20.12.2025

Published: 01.01.2026

Citation:
Sindhu, M & Padhmini, S. "Poet Na.Muthukumar Women in the Poems of the First Pest Seller." *Shanlax International Journal of Tamil Research,* vol. 10, no. 3, 2026, pp. 61–65.

DOI:
https://doi.org/10.34293/tamil.v10i3.10038

*Corresponding Author:
padhminicute1997@gmail.com

CC BY NC ND

This work is licensed under a Creative Commons Attribution-ShareAlike 4.0 International License

# Poet Na. Muthukumar Women in the Poems of the First Pest Seller

**Dr. M. Sindhu**
*Associate Professor, Tamil Department*
*Dr. N.G.P. College of Arts and Sciences, Kaalapatti, Coimbatore*

**Mrs. S. Padhmini**
*Doctoral Researcher (Part-time), Tamil Department*
*Dr. N.G.P. College of Arts and Sciences, Kaalapatti, Coimbatore*
*http://orcid.org/ 0009-0003-6834-6729*

**Abstract**

*In modern Tamil poetry, where the feminist perspective has emerged as an important research field, Na.Muthukumar's poems are important documents that deeply record the life experiences of women. In Na.Muthukumar's poems, the woman is presented not only as an object of beauty or a flame of sacrifice, but also as a complete human identity with feelings and thoughts. This study examines how women are portrayed in the poems of poet N. Muthukumar from a biological and sociological perspective. Furthermore, she is shown as a living being operating within family and social structures. Along with traditional traits such as affection, love, and sacrifice, women's loneliness, heartache, silence, and social barriers are also recorded in her poems. This study explains how women's experiences become the biological realities of modern Tamil society through a content analysis of the selected poetry collection of poet N. Muthukumar, 'Pattam Poochee Virbhavan'. It also indicates that these poems are a document that allows today's generation of readers to know the experiences of women in society that are unknown. The aim of this study is to find out whether N. Muthukumar's poems are established as an important literature that integrates female identity, social memory, and cultural records.*

***Keywords:*** *Woman, Door, Sister, Female Relationship, Modern Poetry*

**References**

1. Butterfly Seller - Poet Na. Muthukkumar (Poetry Collection) - November 2024, Discovery Publications, Chennai - 78.
2. 'Green Goddess' - Salma's Poems - December 2005, Kalachuvadu Publications, Nagercoil - 629001.

# கவிஞர் நா.முத்துக்குமார் பட்டாம் பூச்சி விற்பவன் கவிதைகளில் பெண்கள்

***ச. பத்மினி***
முனைவர்பட்ட ஆய்வாளர் (பகுதிநேரம்), தமிழ்த்துறை
டாக்டர் என்.ஜி.பி. கலை அறிவியல் கல்லூரி, காளப்பட்டி, கோவை

***முனைவர் மூ. சிந்து***
இணைப் பேராசிரியர், தமிழ்த்துறை
டாக்டர் என்.ஜி.பி. கலை அறிவியல் கல்லூரி, காளப்பட்டி, கோவை

***ஆய்வுச் சுருக்கம்***
*நவீனத் தமிழ்க்கவிதை இலக்கியத்தில், பெண்ணியக் கண்ணோட்டம் முக்கியமான ஆய்வுத்தளமாக உருவெடுத்துள்ள நிலையில் நா.முத்துக்குமார் கவிதைகள், பெண்களின் வாழ்வியல் அனுபவங்களை ஆழமாகப் பதிவுசெய்யும் முக்கிய ஆவணங்களாத் திகழ்கின்றன. நா.முத்துக்குமார் கவிதைகளில் பெண் எனப்பட்டவள் அழகியலின் பொருளாகவோ, தியாகத்தின் சுடராகவோ மட்டுமின்றி உணர்வும், சிந்தனையும் கொண்ட ஒரு முழுமையான மனித அடையாளமாக முன்வைக்கப்படுகிறாள். இந்த ஆய்வானது, கவிஞர் நா.முத்துக்குமார் கவிதைகளில் பெண்கள் எவ்வாறு சித்தரிக்கப்படுகிறார் என்பதை பெண்ணின் வாழ்வியல் மற்றும் சமுகவியல் நோக்கில் ஆராய்கிறது. மேலும், அவள் குடும்பம் மற்றும் சமூக கட்டமைப்புகளுக்குள் இயங்கும் உயிருள்ளவளாகக் காட்டப்படுகிறாள். பாசம், காதல், தியாகம் போன்ற பாரம்பரிய பண்புகளோடு சேர்ந்து பெண்களின் தனிமை, மனவேதனை, மௌனம் மற்றும் சமூகத்தடைகள் ஆகியவையும் அவரது கவிதைகளில் பதிவாகி உள்ளது. இந்த ஆய்வு கவிஞர்.நா.முத்துக் குமாரின் ‘பட்டாம் பூச்சி விற்பவன்’ எனும் கவிதைத் தொகுப்பின் உள்ளடக்கப் பகுப்பாய்வின் மூலம் பெண்களின் அனுபவங்கள் எவ்வாறு நவீனத் தமிழ்ச்சமூகத்தின் வாழ்வியல் உண்மைகளாக மாறுகின்றன என்பதை விளக்குகிறது. மேலும், இக்கவிதைகள் இன்றையத் தலைமுறை வாசகர்களுக்கு அறியப்படாத சமூகபெண் அனுபவங்களை அறியும் வகையில் ஆவணமாக உள்ளன என்பதையும் சுட்டிக்காட்டுகிறது. இதன்மூலம் நா.முத்துக்குமார் கவிதைகள், பெண்அடையாளம், சமூகநினைவு மற்றும் பண்பாட்டுப் பதிவுகள் ஆகியவற்றை ஒருங்கிணைக்கும் ஒரு முக்கிய இலக்கியமாக நிலைபெறுகின்றதா என்பதைக் கண்டடைவதே இவ்ஆய்வின் நோக்கமாகும்.*

***குறிப்பு சொற்கள்:*** *பெண் – தூர் – சகோதரி – பெண் உறவு – நவீனக் கவிதை*

## முன்னுரை

பெண்ணியக் கவிதைகள், பெண்ணின் தனிப்பட்ட வாழ்க்கை அனுபவங்களை சமூக அரசியல் கேள்விகளாக மாற்றுகின்றன.

The Personal is Political (Carol Henish & 1970)

கவிதை இலக்கியத்தின், பெண்களின் பிரதிநிதித்துவம் பெரும்பாலும் ஆண் கவிஞர்களின் பார்வையின் வழியே உருவாக்கப்பட்டு வந்துள்ளது. இவ்வாறான படைப்புகளில் பெண் அழகியலின் உருவமாகவும், தியாகத்தின் சின்னமாகவும் கட்டமைக்கப்பட்டுள்ள நிலையில் பெண்ணின் உண்மை வாழ்வியல் அனுபவங்கள் இலக்கியத்தின் எந்தளவு துல்லியமாகப் பதிவுச்செய்யப்படுகிறது என்பது இன்றளவும் ஆய்வுத்தளத்தில் முதன்மைப் பெறுகிறது. பெண் இலக்கிய ஆய்வுகள் பெண்

கவிஞர்களின் படைப்புகள் மீது அதிகமாகக் கவனம் செலுத்தியுள்ள போதும் ஆண் கவிஞர்களின் படைப்புகளில் பெண்ணின் நிலை எவ்வாறு வடிவமைக்கப்பட்டுள்ளது எனும் பார்வை அதிகமாகவே காணப்படுகிறது. இதில் நா.முத்துக்குமார் கவிதைகள் தனித்துவமான ஆய்வுத் தடமாக அமைகிறது. இவரின் கவிதைகள் திரைப்படப் பாடல்கள் வாயிலாக பொதுமக்களிடம் பரவலாக அறியப்பட்டிருந்தாலும் ஒரு கவிஞராக அவர் உருவாக்கிய பெண் உலகம் குறித்தப் பார்வை இந்த ஆய்வுக்கு அடிப்படையாகிறது. நா.முத்துக்குமாரின் கவிதைகளில் பதிவாகியுள்ள பெண்களின் வாழ்க்கை அனுபவங்கள் இன்றையத் தலைமுறைக்கு பெரும்பாலும் அறியப்படாத சமூக நினைவுகளாக உள்ளன. எனவே இக்கவிதைகள் தனிப்பட்ட உணர்ச்சிகளின் வெளிப்பாடாக மட்டுமின்றி ஒரு காலக் கட்டத்தின் பெண்கள் வாழ்க்கையை ஆவணப்படுத்தும் சமூகப் பதிவுகளாகவும் முக்கியத்துவம் பெறுகின்றன. பெண்களின் தனித்துவத்தை ஒரு ஆண் கவிஞராக முனைவர், கவிஞர் நா.முத்துக்குமார் கவிதைகளில் எந்த அளவு உரிமைகளையும், உணர்வுகளையும் கையாண்டுள்ளார் என்பதை இக்கட்டுரை ஆராய்கிறது.

### குடும்ப அமைப்பில் தாய்

குடும்ப அமைப்பில் தாய், தன் குழந்தைகளுக்கு முதல் ஆசிரியர் ஆவர். குறிப்பாக நம் தமிழ்ச் சமூகத்தின் தாயாகப்பட்டவள் தியாகத்தின் உருவமாகவும், பாசத்தின் பிறப்பிடமாகவும் குடும்பத்தில் ஏற்படும் முரண்களை சரிசெய்து அக்குடும்பத்தை சிறந்த முறையில் எடுத்துச் செல்லக் கூடிய ஒரு ஒப்பற்ற பொறுப்பை தன்னில் கொண்டிருக்கும் பெண் தெய்வம் என்றே சொல்லலாம். பல ஆண் மற்றும் பெண் எழுத்தாளர்கள் தாயின் தனித்துவத்தையும், தலையாய பண்புகளைப் பற்றியும் தம் எழுத்தின் வாயிலாகப் பதிவு செய்துள்ளனர். இதில் சிறுவயதிலேயே தாயை இழந்த நா.முத்துக்குமார் தன் முதல் படைப்பில் தாயின் இருப்பையும், அவர் குடும்பத்தில் எத்தகைய சூழலில் வாழ்ந்தார் என்பதையும், தன் கணவனிடமிருந்து எந்த இடத்தில் வைக்கப்பட்டார் என்பதையும் படிமமாகவே 'தூர்' எனும் கவிதை வாயிலாகப் பகிர்கிறார்.

தாய் என்பவள் குடும்பத்தை நடத்தும் நிர்வாகியாகவும் உணர்ச்சிகளை ஒழுங்குபடுத்தும் மையமாகவும் செயல்படுகிறார். குடும்பத்தின் அன்றாட ஒழுங்கு முறைகள், உணவு, பொருளாதாரம், குழந்தைகளின் எதிர்காலம் என எல்லாவற்றையும் சுமக்கும் ஒரு மனித உருவமாக தாய் மையப்படுத்தப் படுகிறாள். 'அம்மாவின் கரிச்சுவர்' எனும் கவிதையில் தாயானவளின் உழைப்பு கண்ணுக்குத் தெரியாத உழைப்பாகவே மாறுகிறது. சுவர் கரியடைவதைப் பெரிதாக யாரும் கவனிக்காததுப் போலவே தாயின் சோர்வும் மனஉளைச்சலும் பெரிதாக குடும்பத்தில் யாருடையப் பார்வைக்கும் தெரிவதில்லை. அதேபோல, கவிஞர் சல்மா அவர்கள் தன் கவிதையில்,

**வீடு என்பது அவளுக்கு ஓய்விடம் அல்ல,**
**முடிவில்லா பணியிடம்.**
**(பச்சை தேவதை- சல்மா கவிதைகள்)**

என்ற கவிதை வாயிலாகக் குறிப்பிடுகிறார். மேலும்,

**அவள் சமைக்கும் உணவில்**
**அவள் கனவுகளும் கரைந்து விடுகின்றன.**
**(இன்குலாப் கவிதைகள்)**

என்று கவிஞர் இன்குலாப் அவர்களும், தாய் தன் குடும்பத்திற்காகத் தனக்குரிய தனிப்பட்ட வாழ்க்கையில் இருந்து எப்படி மாற்றிக் கொள்கிறார் என குறிப்பிடுகிறார்.

### சகோதரி என்றப் பெண் உறவு

தமிழ் இலக்கிய மரபில் சகோதரி என்ற உறவு பெரும்பாலும் பாசம், தியாகம்

மற்றும் பாதுகாப்பு ஆகியவற்றின் அடையாளமாகக் கட்டமைக்கப்பட்டுள்ளது. அந்தப் பாசத்திற்குள் மறைந்திருக்கும் சமூக எதிர்பார்ப்புகள் மற்றும் பொறுப்புகள் குறித்த விமர்சனம் நவீனக் கவிதைகளிலும் வெளிப்படத் தொடங்கியுள்ளது. கவிஞர் நா.முத்துக்குமார் அவர்கள், சகோதரிகளின் அன்பு, எதிரிபார்ப்பு, ஆசை, கோவம், ஏமாற்றம், வெட்கம் போன்ற பல உணர்வு நிலைகளின் வெளிபாடாக சகோதரியைப் படைத்துள்ளார். அவருடைய சிலகேள்விகள் எனும் கவிதையில் சகோதரியிடம் தனக்கிருந்த வெட்கத்தையும் எதார்த்தமாக தன் வாழ்வியல் சூழலுக்கு ஏற்ப வெளிப்படுத்தியுள்ளார். அவற்றில்,

***"என் அண்ணன் என்றவள்***
***சகதோழிகளிடம்***
***அறிமுகப்படுத்துகையில்***
***வெட்கத்தால் மௌனித்து***
***தலைகுனிந்திருக்கிறாயா"***

***(பட்டாம் பூச்சி விற்பவன் - 'சிலகேள்விகள்', ப.33)***

எனும் வரிகள் பால்யப் பருவத்திற்கே நம்மை அழைத்துச் சென்று விடுகிறது. பெண் குழந்தைப் பிறந்தால் செலவு அதிகம் என்றும் அன்றைய நாட்களில் பெண் பிள்ளைகளை பெற்றப் பெற்றோர்கள் வருந்தியதுண்டு, காலம் மாற மாற எல்லாமுமே மாறியது. ஆனால் அந்தப் பெண் குழந்தைகளுக்கான நிலை மட்டும் மாறவேயில்லை. இக்கவிதையில் சகோதரியை ஒரு அன்பு உறவாக மட்டும் காட்டாமல், குடும்பத்தின் பொருளாதாரச் சுமையாக அவள் மாற்றப்படும் நிலையையும் கேள்விக்கு உள்ளாக்குகிறார். பாரதியார் இந்த உறவைப் பற்றி,

***"உடன் பிறந்தவள் என்றாலே***
***உயிரோடு கலந்த உறவு"***

எனும் அவரது பார்வை, சகோதரியை குடும்பத்தின் உணர்ச்சிமையமாக உயர்த்து கிறது. ஆனால் இத்தகைய உயர்த்தல் அவள் மீது ஏற்றப்படும் சமூகப் பொறுப்புகளை மறைக்கும் ஆபத்தையும் உடையது. இதனையே கொஞ்சம் நவீனமாக விமர்சிக்கும் கவிஞரான சுகுமாரன் அவர்கள்,

**"அவள் என் அக்கா**
**ஆனால் என் பொறுப்பல்ல**
**எனச் சொல்ல**
**எனக்கும் பயிற்சி இல்லை"**

***(பூமியை வாசிக்கும் சிறுமி - சுகுமாரன் கவிதைகள்)***

என்ற வரிகள் குடும்பத்தில் ஆண் குழந்தைகளுக்குக் கற்றுக்கொடுக்கப்படும் மறைமுக அதிகாரத்தை வெளிப்படுத்துகிறது. கவிஞர்.நா.முத்துக்குமார் தன் கவிதையில்,

**"கஷ்டப்பட்டு சம்பாதித்து**
**கல்யாணம் பண்ணித்தர மட்டுமா**
**அக்காவும் தங்கையும்"**

***(பட்டாம் பூச்சி விற்பவன் - 'சில கேள்விகள்',ப.33)***

என்று இச்சமூகத்தின் மீதான தன்னுடைய மனநிலையை ஆழமாக எடுத்து வைக்கிறார். இதன் மூலம் சகோதரி என்றப் பெண் உறவு பாசத்திற்குள் அடைக்கப்பட்டு, அவளது தனிப்பட்ட கனவுகள் சமூக கடமைகளுக்குள் கரைந்துவிடும் நிலையை வெளிப்படுத்து வதாக உள்ளது.

## அனுபவமும் நினைவுகளும் சுமக்கும் பெண் - பாட்டி

பாட்டி என்றப் பெண் உருவம் தமிழ்க் கவிதைகளில் அனுபவத்தின் முதிர்ச்சியையும் குடும்ப நினைவுகளின் தொடர்ச்சியையும் பிரதிநிதித்துவப் படுத்துகிறது. "நல்ல சாவு" என்றக் கவிதையில் நா.முத்துக்குமார் இந்தக் கதாப்பாத்திரத்தை மரணத்திலும் இயல்பாக ஏற்றுக்கொள்ளும் மனப்பக்குவத்துடன் காட்டியுள்ளார். குறிப்பாக,

**"இதோ அதோ என்று**
**இழுத்துக் கொண்டிராமல்**
**பக்கவாதத்தால் படுக்கையில்**
**கழியாமல் எல்லோருடனும்**

***பேசிச் சிரித்து***
***தூங்கிய இரவில்***
***செத்துப் போனார் தாத்தா"***

***(பட்டாம் பூச்சி விற்பவன் - "நல்ல சாவு", ப.30)***

வயதான போதும் பிறருக்குத் துன்பம் தராமல் சிரித்துப் பேசி, தூக்கத்தில் வரும் சாவு நல்லசாவு எனில், இவ்வாறான உடல்நிலையில் வாழும் மற்றவர்களின் இறப்பு பற்றிய எண்ண அலைகளையும் பாட்டி எனும் கதாப்பாத்திரம் வழிப்பதிவு செய்கிறார்.

***"அவள் சொல்லாதக் கதைகளில்***
***ஒருதலைமுறை தூங்கிக் கிடக்கிறது"***

எனும் கவிதையில் கவிக்கோ அப்துல் ரகுமான் அவர்கள், வரலாற்றின் உயிர்ப்பான ஆவணமாக பாட்டி எனும் பெண் உறவு இருப்பதைச் சுட்டிக்காட்டுகிறார்.

### சமூக விளிம்புகளில் வாழும் பெண்கள்

சமூக விளிம்புநிலைகளில் வாழ்ந்துக் கொண்டிருக்கும் பெண்கள், பெரும்பாலும் மௌனமாகவே வைக்கப் படுகிறார்கள். நா.முத்துக்குமார் "மனுஷிகள்" எனும் கவிதையில் கள்ளுக்கடையில் சால்னா விற்பவள், கருவாட்டுக்காரி போன்ற பெண்களை, கெட்டவார்த்தையின் துணையால் கடையையும்கற்பையும்காத்துக்கொள்ளும் நிலையைப் பதிவிடுகிறார். அவையாவன,

***"வாசனையாகப் பேசி***
***அய்யர் தெருவிலும்***
***விற்று விடுகிறாள்***
***கருவாட்டுக்காரி"***

***(பட்டாம் பூச்சி விற்பவன் - "மனுஷிகள்", ப.27)***

***"வயிற்றுப்பசி எல்லா நீதிகளையும்***
***மறுபடியும் எழுதுகிறது"***

என்று லீனா மணிமேகலை தன் கவிதையில் குறிப்பிடுகிறார். பெண்களின்வாழ்க்கையில் உயிர்வாழ்தலே முதன்மையான ஒன்றாக மாறுகிறது. இத்தகையப் பெண்கள் இரக்கப் பொருளாகமாற்றாமல், மாறாகஅவர்களின் வாழ்வை ஆவணப்படுத்தும் விதமாக தன் படைப்பில் தெரியப்படுத்துகிறார் கவிஞர் நா.முத்துக்குமார்.

### முடிவுரை

- கவிஞர்.நா.முத்துக்குமார் கவிதைகளில் பெண்கள் எவ்வாறு குடும்பம் மற்றும் சமூக அமைப்புகளுக்கும் அனுபவத்தின் வழியாகக் கட்டமைக்கப்படுகிறார் என்பதை விளக்குகிறது.
- தாய், சகோதரி, பாட்டி மற்றும் பிற பெண் பாத்திரங்கள் தனித்தனி அடையாளங்களாக அல்லாமல், சமூக அமைப்பின் வெவ்வேறு நிலைகளில் வாழும் மனிதர்களாக உருவெடுக்கின்றன. இவர்களின் வாழக்கை மௌனத்திலும், செயலிலும் பதிவாகிறது என்பதே இதன் முக்கியத்துவம் ஆகும்.
- நா.முத்துக்குமார் கவிதைகள் பெண்களின் குடும்ப மற்றும் சமூக வாழ்க்கையை உணர்வுப் பகிர்வாக மட்டுமல்லாமல், சமூகப் பெண்ணிய ஆய்வுக்கான முக்கிய ஆவணங்களாகவும் மாறுகின்றன என்பது மெய்ப்பிக்கப்படுகிறது.
- அவரது கவிதைகள் இன்றைய சமூகத்திற்கும், இனிவரும் தலைமுறைக்கும் பெண்களின் வாழ்வியல் அனுபவங்களை புரிந்துக்கொள்ள உதவும் இலக்கியங்களாக விளங்குகிறது என்பதை உறுதிப்படுத்துகிறது.
- கவிஞர். நா. முத்துக்குமார் கவிதைகள், தமிழ் நவீனக் கவிதை மரபில் பெண்வாழ்வை ஆழமாகப் பதிவுச் செய்த படைப்புகளாகவே நிலைபெறுகின்றன.

### துணை நூற்பட்டியல்

1. பட்டாம் பூச்சி விற்பவன் - கவிஞர் நா.முத்துக்குமார் (கவிதைத் தொகுப்பு) - நவம்பர் 2024, டிஸ்கவரி பதிப்பகம், சென்னை.
2. பச்சை தேவதை' - சல்மா கவிதைகள் - டிசம்பர் 2005, காலச்சுவடு பதிப்பகம், நாகர்கோயில்.